**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.99/2014**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்தோஷ் குமார் | மதம் | : இந்து |
| த/பெ | : மோகனகிருஷ்ணன் | ஜாதி | : -- |
| வயது | : 48 | கிராமம் | : -- |
| தொழில் | : மென்பொருள் பொறியாளர் | வட்டம் | : பெங்களூர் |

**06.03.2026**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் என் தாத்தா முனுசாமி செட்டிக்கு பாத்தியம். முனுசாமி செட்டி என்ன செய்தார் என்றால் அவரது மகள் பிரபாவதியம்மாளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். செட்டில்மெண்ட் சொத்திற்கு கிழக்கு பக்கம் திருவள்ளுவர் தெரு உள்ளது என்றால் ஆமாம். வழக்கு சொத்திற்கு மேற்கே சுந்தர வரதலு நாயுடு மாந்தோப்பு உள்ளது என்றால் ஆமாம். 06.08.1981ம் தேதிதான் விற்பனை செய்யப்பட்டது என்றால் ஆமாம். 10.08.1981தான் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை. ஆனால் வருடம் 1981தான். மேற்படி கிரைய பத்திரம் எழுதி கொடுத்தது யார் என்றால் என் தாயார் பிரபாவதி ஆவார்.

2. என் தாயார் பிறந்தது திருத்தணி என்றால் சரிதான். அவர் இறுதிவரை திருத்தணியில்தான் இருந்தார் என்றால் ஆமாம். பத்திரத்தில் நான்கு எல்லை தவறாக உள்ளது என்ற விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் தேதி சரியாக ஞாபகமில்லை. 2014ல் எனக்கு செட்டில்மெண்ட் எழுதிய பிறகுதான் தெரிய வந்தது. நான்கு எல்லை தவறாக உள்ளதால் அதை சரி செய்து சீர்த்திருத்தம் செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுத்தேனா என்றால்

எனக்கு எழுதிய ஆவணத்தில் நான்கு எல்லை தவறு இல்லை. மற்ற ஆவணங்களில் இருந்தது. மற்ற ஆவணங்களில் உள்ள நான்கு எல்லை தவறுகளை சரி செய்ய நாங்கள் ஏதேனும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. நான்கு எல்லை தவறாக உள்ளது என்பதால் அந்த பத்திரங்கள் செல்லாது என்று நான் ஏதேனும் பரிகாரம் கோரினேனா என்றால் என் ஆவணம் சரியாக உள்ளது. அது வேறு நபருடைய ஆவணம் என்பதால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. வாதிக்கு கிரைய ஆவணம் என் தாயார்தான் எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம்.

3. வாதியின் கிரைய ஆவணத்தில் அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவு அனுமதி எண்.17/1980 என குறிப்பிட்டுதான் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என்னுடைய சகோதரி அனிதா, சுசீலா எனக்கு 07.08.2013ல் என் தாயார் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் எனக்கு எழுதி வைத்துள்ளார். 3 பேருக்கும் ஒரே ஆவணமாக என் தாயார் எழுதவில்லை. எனக்கு 2013ல் 3 ஆவணங்கள் எழுதி உள்ளார். என் அக்காவுக்கு என்ன ஆவணம் எழுதியுள்ளார் என்பது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 07.08.2013ம் தேதியிட்ட ஆவணம் என் தாயார் எனக்கு எழுதி வைத்தது என்றால் ஆமாம். (**சாட்சி ஒப்புக்கொண்டதால் 07.08.2013ம் தேதியிட்ட ஆவணம் வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) ஆனால் அந்த ஆவணம் ரத்து செய்யப்பட்டுவிட்டது.

4. வா.சா.ஆ 8 தான ஆவணத்தில் அங்கீகரிக்கப்பட்ட அனுமதி எண்.17/1980ன் மனை வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது DTCP அங்கீகரிக்கப்பட்ட மனை வரைபடம் இல்லை. வா.சா.ஆ 8 ஆவணம் சார்பதிவகத்தில் எழுதி பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ 8 வரைபடத்தில் மனை எண்.3க்கும், 4க்கும் இடையில் சந்து பகுதி உள்ளதா என்றால் இல்லை. என் தாயாருக்கு தெலுங்குதான் தெரியும் தமிழ் எழுதப்படிக்க தெரியாது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 1981ல் என் தாயாருக்கு புற்று நோய் ஏற்பட்டு கண் தெரியாது, காது கேட்காது. என் தாயாருக்கு புற்று நோய் என்பதையும் கண் தெரியாது, காது கேட்காது

என்பதையும் என் எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. ஆனால் அனைத்து ஆவணங்களிலும் என் தாயார் தான் கையெழுத்து செய்துள்ளார் என்றால் ஆமாம்.

5. மனை எண்.1ன் தெற்கு பகுதி யார் வாங்கினார் என்றால் உலகநாதன் வாங்கினார். 07.08.1981ல் உலகநாதன் வாங்கினார் என்றால் எனக்கு தேதி தெரியாது. ஆனால் வருடம் 1981 ஆகும். பத்திர எண்.1900/1981 என்றால் எனக்கு ஆவண எண் தெரியாது. 1981ல் கதிர்வேலு வழக்கு சொத்தை வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. 1992ல் அந்த சொத்தை கதிர்வேலுவிடமிருந்து அண்ணாமலை கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். வாதி சிதம்பரம் 2014ல் வழக்கு சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் ஆமாம். சிதம்பரம் கிரையம் வாங்கிய சொத்து 1400 சதுரடி என்றால் ஆமாம். அந்த கிரைய ஆவணத்தில் கிரைய தொகை ரூ.500/- ஆக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வையாபுரி எந்த மனை எண்ணை வாங்கினார் என்றால் சரியாக ஞாபகமில்லை. வையாபுரி மனை எண்.2ஐ வாங்கினார் என்றால் மனை எண்.2ல் வடக்கு பகுதியை வாங்கினார்.

6. அவரது கிரைய ஆவணத்தில் மனை எண்.2 முழுவதுமாக கிரையம் கொடுத்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணம் தவறானது என்பதால் மற்றொரு ஆவணம் எழுதப்பட்டது. அந்த கிரைய ஆவணத்தில் அளவு 2800 சதுரடி என எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் கிரைய தொகை ரூ.1000/- என எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 16.07.2014ல் என் தாயார் மனை எண்.3க்கும் 4க்கும் இடையே காலி மனை இருப்பதாக காட்டி என் தாயார் எனக்கு தான ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். என் தாயார் முறையாக நில அளவை செய்து அதில் உள்ள இடத்தைதான் எனக்கு எழுதி வைத்தார். என் தாயாருக்கு கண் பார்வை இல்லை என்பதால் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பணம் கட்டி இடத்தை அளந்து சரிபார்த்த பின்புதான் அந்த ஆவணத்தை பதிவு செய்தார்.

7. சார்பதிவாளர் இடத்தை அளந்ததையோ நில அளவையருக்கு பணம் கட்டியதையோ காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் அ.வ.எண்.97/2014, அ.வ.எண்.98/2014, அ.வ.எண்.99/2014ல் ஏதோ ஒரு வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நில அளவையர் வைத்து நான் அளந்தேன் என்பதை காட்ட நில அளவையர் அறிக்கையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நாங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் நில அளவைக்கு பணம் செலுத்தி சார்பதிவளார் இடத்தை அளந்து சரிபார்த்து பதிவு செய்தார். நிலஅளவையர் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் நில அளவைக்கு பணம் செலுத்தியதற்கான ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்பது எனக்கு ஞாபகமில்லை. அதை சரிபார்த்து இல்லாவிட்டால் தாக்கல் செய்கிறேன்.

8. நான் பணம் கட்டி நில அளவை செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உண்மையிலேயே நில அளவை செய்திருந்தால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. எனக்கு எழுதிய தான ஆவணத்தில் அனுமதி எண்.17/1980ல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தை இணைக்கவில்லை என்றால் ஆமாம். எனது செட்டில்மெண்ட் ஆவணத்தில் நில அளவை செய்து சரிபார்த்த பின்பு பதிவு செய்யப்பட்டது என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது செட்டில்மெண்ட் ஆவணத்தில் மனை எண் குறிப்பிடவில்லை என்றால் மனை எண் இல்லாததால் குறிப்பிடவில்லை. உண்மையிலேயே அவ்வாறு மனை எண் இல்லாததால்தான் அதை குறிப்பிடவில்லை என்றால் DTCP வரைபடத்தில் மனைதாரரின் மனை என குறிப்பிடப்பட்டு அதற்கு மனை எண் குறிப்பிடாததால் ஆவணத்திலும் மனை எண் குறிப்பிடவில்லை.

9. வாதியின் சொத்தை அபகரிக்க வேண்டிதான் பொய்யாக ஆவணம் உருவாக்கியுள்ளோம் என்றால் இல்லை. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 2, பி.வா.சா.ஆ 3 ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 5, பி.வா.சா.ஆ 6

ஆவணங்கள் பற்றி வாதிகளுக்கு தெரியாது என்பதால் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)